CNR NO: TNTH13-006156-2023

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04-ஆம் நாள் செவ்வாய்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 725/2023

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
போடி நகர் காவல்நிலையம்,
குற்ற எண்.262/2023. ..... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

சுதாகரன் (வயது 48/2026),
த/பெ.நடராஜன். ..... எதிரி

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| வ.எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | குற்றமுறையீட்டாளர்:<br>சார்பு ஆய்வாளர்,<br>போடி நகர் காவல்நிலையம். | எதிரி:<br>சுதாகரன். |
| 2. | எதிரியின் வயது | 48/2026. |
| 3. | தந்தை/கணவர் பெயர் | த/பெ.நடராஜன். |
| 4. | மதம் | இந்து. |
| 5. | தொழில் | கூலி. |

<table>
<tr><td>6.</td><td>முகவரி</td><td>நீலிபடுகை, தேவர் காலணி, போடிநாயக்கனூர்.</td></tr>
<tr><td>7.</td><td>தாலுகா, மாவட்டம்</td><td>போடிநாயக்கனூர், தேனி.</td></tr>
<tr><td>8.</td><td>சம்பவம் நிகழ்ந்த நாள்</td><td>01.07.2023.</td></tr>
<tr><td>9.</td><td>கைது</td><td>01.07.2023.</td></tr>
<tr><td>10.</td><td>பிணையில் விடுவித்தல்</td><td>06.07.2023.</td></tr>
<tr><td>11.</td><td>எதிரி சிறையில் இருந்த நாட்கள்</td><td>6 நாட்கள்.</td></tr>
<tr><td>12.</td><td>இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>10.07.2023.</td></tr>
<tr><td>13.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி</td><td>10.07.2023.</td></tr>
<tr><td>14.</td><td>கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி</td><td>07.08.2023.</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>11.08.2023.</td></tr>
<tr><td>16.</td><td>விசாரணை துவக்கம்</td><td>14.09.2023.</td></tr>
<tr><td>17.</td><td>சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td><table>
<tr><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>27.03.2025</td><td>27.03.2025</td></tr>
<tr><td>PW2</td><td>27.03.2025</td><td>27.03.2025</td></tr>
<tr><td>PW3</td><td>02.07.2026</td><td>02.07.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td>20.07.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>04.07.2026.</td></tr>
<tr><td>20.</td><td>பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>இல்லை.</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td>விடுதலை.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 23. | தீர்ப்புரை நகலை வழங்குதல் | இல்லை. |
| 24. | தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள் | இல்லை. |
| 25. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 26. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 27. | காலதாமதத்திற்கான காரணம் | 2025-ஆம் வருடத்தில்தான் அரசுத்தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டது. |

*****

இவ்வழக்கு 10.07.2023 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 20.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை - I திருமதி.M.தவமணிசெல்வி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.A.வினோத்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்......

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது சட்டப்பிரிவு 353 இந்திய தண்டனைச் சட்டம் 1860 மற்றும் 4(1) (a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1). **இறுதியறிக்கையின்படி அரசுத்தரப்பு வழக்கு**:

கடந்த 01.07.2023-ஆம் தேதி, 06.00 மணிக்கு, போடி நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அசோக் என்பவர், போலீஸ் பார்ட்டி 1-வது சாட்சி வீரமுத்து, 2-வது சாட்சி பாலாஜி ஆகியோர்களுடன் போடி, குப்பிநாயக்கன்பட்டியில் உள்ள அறிவுதிருக்கோவில் அருகில் வாகனத் தணிக்கை செய்து வரும்போது, எதிரி சுதாகரன் என்பவர் TN 59 CA 5661 என்ற பதிவெண் கொண்ட BAJAJ CT 100 இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில், லாப நோக்கில் விற்பனை செய்வதற்காக அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக பிளாஸ்டிக் சாக்கு பையில் 180 ML பிடிக்கக்கூடிய EXPRESS பிராந்தி பாட்டில்கள் - 4, OLD CHEF பிராந்தி பாட்டில்கள் - 3 மற்றும் VORION பிராந்தி பாட்டில் - 1 என மொத்தம் 8 பிராந்தி பாட்டில்களை வைத்து ஓட்டி வந்தவரை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்டபோது, சோதனை செய்யவிடாமல் பிரச்சனை செய்து, அரசு பணியை செய்வதை தடுத்த குற்றத்திற்காக, எதிரி மீது இ.த.ச பிரிவு 353 மற்றும் 4(1) (a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் அரசுத்தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207-ன் பிரிவின் கீழ் 07.08.2023-ஆம் தேதியன்று இலவசமாக வழங்கப்பட்டது.

3). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. போதிய கால அவகாசத்திற்கு பின் கோப்புகளை பரிசீலனை செய்ததில், எதிரி மீது முகாந்திரம் எழுந்ததால், 11.08.2023-ஆம் தேதியன்று எதிரி மீது இ.த.ச பிரிவு 353 மற்றும் 4(1) (a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று கூறினார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க

உத்தரவிடப்பட்டது.

4). அரசுத்தரப்பில் சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசுத்தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.4 வரையிலான சான்றுப்பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5). **அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெறும் அரசுத்தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு**:

5.1). அ.சா.1 முதல்நிலை காவலர் திரு.வீரமுத்து சாட்சியத்தில், 01.07.2023-ஆம் தேதி, போடி நகர் காவல்நிலையத்தில், முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது, போடி நகர் சார்பு ஆய்வாளர் திரு.அசோக் அவர்கள், முதல்நிலைக் காவலர் - 990 பாலாஜி அவர்களுடன், போடி நகர் மதுவிலக்கு குற்றத்தடுப்பு சம்பந்தமாக, போடி, குப்பிநாயக்கன்பட்டி, அறிவுதிருக்கோவில் அருகில், காலை 06.00 மணிக்கு வாகனத் தணிக்கை செய்யும்போது, பின்னர் பெயர், விலாசம் தெரிந்து கொண்ட, தேவர் காலனியை சேர்ந்த நடராஜன் மகன் சுதாகர் என்பவர், TN 59 CA 5661 பஜாஜ் CT 100 வண்டியில் வரும்போது, வாகனத் தணிக்கை செய்ய விடாமல் தடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5.2). மேற்படி அ.சா.1 முதல்நிலை காவலர் திரு.வீரமுத்து சாட்சியத்தில், அப்போது, தானும், தன்னுடன் இருந்த பாலாஜி அவர்களும் வாகனத்தை மறித்து, வாகனத்தை சோதனை செய்யும்போது, வண்டியில் முன்னால் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையில் 180 எம்எல் கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் - 4, ஓரியன் பிராந்தி பாட்டில் - 1 மற்றும் 3 பிராந்தி பாட்டில்கள், மொத்தம் 8 பிராந்தி பாட்டில்களை சார்பு ஆய்வாளர் முன்னிலையில் 06.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும்,

அந்த அத்தாட்சியில் தானும், பாலாஜியும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், அத்தாட்சியில் உள்ள 1-வது கையொப்பம் தன்னுடையது என்றும், **அத்தாட்சியில் உள்ள 1-வது கையொப்பம் அ.சா.ஆ.1** என்றும், பின்பு அவரை சார்பு ஆய்வாளர் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்ததாகவும், எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்ததாகவும், பின்பு போடி நகர் காவல்நிலைய குற்ற எண்.262/2023-ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.3). அ.சா.2 முதல்நிலை காவலர் திரு.பாலாஜி சாட்சியத்தில், கடந்த 01.07.2023-ஆம் தேதி, போடி நகர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராகப் பணியில் இருந்தபோது, தானும், போடி நகர் சார்பு ஆய்வாளர் மற்றும் அ.சா.1-ம் அவர்களுடன் போடி நகர் மதுவிலக்கு குற்றத்தடுப்பு சம்பந்தமாக, போடி, குப்பநாயக்கன்பட்டி, அறிவுதிருக்கோவில் அருகில், காலை 06.00 மணிக்கு வாகன தணிக்கை செய்யும்போது, பின்னர் பெயர், விலாசம் தெரிந்து கொண்ட, தேவர் காலனியை சேர்ந்த நடராஜன் மகன் சுதாகர் என்பவர் TN 59 CA 5661 பஜாஜ் CT 100 வண்டியில் வரும்போது, வாகன தணிக்கை செய்ய விடாமல் தடுத்ததாகவும், ஆஜர் எதிரிதான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.4). மேற்படி அ.சா.2 முதல்நிலை காவலர் திரு.பாலாஜி சாட்சியத்தில், அப்போது, தானும், தன்னுடன் இருந்த அ.சா.1-ம் வாகனத்தை மறித்து, வாகனத்தை சோதனை செய்யும்போது, வண்டியில் முன்னால் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையில் - 180 எம்எல் கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் - 4, ஓல்டு செப் பிராந்தி பாட்டில்கள் - 3, ஓரியன் பிராந்தி பாட்டில் - 1, மொத்தம் 8 பிராந்தி பாட்டில்களை வைத்திருந்ததாகவும், காலை 06.00 மணிக்கு டாஸ்மாக் கடை மூடியிருந்த நிலையில், அவரது பையில் 8 பாட்டில்கள் இருந்ததால், காரணம் கூறி சார்பு ஆய்வாளர் அவரை கைது செய்து, எதிரிடமிருந்து 8 பாட்டில்களையும், இருசக்கர வாகனத்தையும் சார்பு ஆய்வாளர்

முன்னிலையில் 06.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் தானும், அ.சா.1-ம் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், அத்தாட்சியில் உள்ள 2-வது கையொப்பம் தன்னுடையது என்றும், **அத்தாட்சியில் உள்ள 2-வது கையொப்பம் அ.சா.ஆ.2** என்றும், பின்பு அவரை சார்பு ஆய்வாளர் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்தார் என்றும், எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்ததாகவும், பின்பு போராடி நகர் காவல்நிலைய குற்ற எண்.262/2023-ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.5). அ.சா.3 காவல் ஆய்வாளர் திரு.அசோக் சாட்சியத்தில், கடந்த 01.07.2023-ஆம் தேதி, காலை 06.00 மணிக்கு, போடி நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, போடி, குப்பிநாயக்கன்பட்டி, அறிவு திருக்கோயில் அருகில், போடி நகர் காவல்நிலைய காவலர்கள் வீரமுத்து, பாலாஜி ஆகியோருடன் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக வாகனத் தணிக்கையில் ஈடுபட்டு இருந்தபோது, போடி, தேவர் காலனி, நீலிபடுகையில் குடியிருக்கும் நடராஜன் மகன் சுதாகரன் என்பவர், TN 59 CA 5661 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் சிடி 100 வாகனத்தில் வந்தவரை மறித்து, விசாரணை செய்தபோது, அவர் உட்கார்ந்து இருந்த இருக்கைக்கு முன்பாக, டேங்க் பகுதியில் வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையில் வைத்திருந்த பொருட்களை சோதனை செய்தபோது, அவர் காவலராகிய தங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல், தங்கள் பணியை முழுமையாக செய்ய விடாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5.6). மேற்படி அ.சா.3 காவல் ஆய்வாளர் திரு.அசோக் சாட்சியத்தில், பின்னர், மேற்படி எதிரியிடம் இருந்த பிளாஸ்டிக் சாக்கை சோதனை செய்ததில், 180 ml பிடிக்கக்கூடிய எக்ஸ்பிரஸ் பிராந்தி மதுபானம் நிறைந்த பாட்டில்கள் 4-ம், ஓல்ட் செஸ் பிராந்தி மதுபானம் நிறைந்த பாட்டில்கள் - 3-ம், ஓரியன் மதுபானம் நிறைந்த பாட்டில் - 1-

ம், ஆக மொத்தம் 8 பாட்டில்கள் வைத்திருந்தார் என்றும், இது குறித்து அவரிடம் விசாரித்தபோது, டாஸ்மாக் கடைகள் இயங்காத நேரங்களில் பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு லாப நோக்கத்தில் விற்று வந்ததை ஒப்புக்கொண்டு, அதேபோல் இந்த பாட்டில்களையும் விற்பனைக்காக வாங்கி கொண்டு செல்வதாக கூறினார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.7). மேற்படி அ.சா.3 காவல் ஆய்வாளர் திரு.அசோக் சாட்சியத்தில், எனவே, மேற்படி நபரை அந்த இடத்திலேயே கைது செய்து, அவரிடம் இருந்த மது பாட்டில்களை அங்கு அந்நிய தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால், தன் உடன் வந்த காவலர் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி, அவர் ஓட்டி வந்த வாகனத்தையும் கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரி மற்றும் வாகனம் மற்றும் மது பாட்டில்களுடன் நிலையம் வந்து, நிலைய குற்ற எண்.262/2023, பிரிவு 4(1)(a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் மற்றும் பிரிவு 353 இ.த.ச–ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** என்றும், பின்னர் உடன் வந்த காவலர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் எதிரியை புலன் விசாரணை முடித்து 01.07.2023 அன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, வழக்கு சொத்துகளான வாகனத்தையும், மதுபாட்டில்களையும் படிவம் - 91 மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாகவும், **அத்தாட்சி அ.சா.ஆ.4** என்றும், **180 ml அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை - 4) அ.சா.பொ.1** என்றும், **ஓல்ட் செஃப் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை - 3) அ.சா.பொ.2** என்றும், **ஓரியன் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை - 1) அ.சா.பொ.3** மற்றும் **TN 59 CA 5661 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் CT 100 இருசக்கர வாகனம் அ.சா.பொ.4** என்றும், **படிவம் - 91 அ.சா.ஆ.5** என்றும், அன்றையதினமே தனது புலன் விசாரணையை முடித்து, எதிரிக்கு எதிராக பிரிவு 4(1)(a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் மற்றும் பிரிவு 353 இ.த.ச–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6). அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்குப் பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(b) பிரிவின் கீழ் 04.07.2026-ஆம் தேதி வினவியபோது, சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், மேலும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார். பின்னர், தகுந்த வாய்ப்பிற்கு பிறகு எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7). அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுத்தரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

8). எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இடம்பெறவில்லை என்று வாதிட்டார். மேலும், அரசுத்தரப்பில் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் எதிரியை விடுதலை செய்யுமாறு கோரி வாதிட்டார்.

9).**<u>தீர்விற்குரிய பிரச்சினை</u>**:

இவ்வழக்கில் ஆராய்ந்து தெளிவு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த வழக்கின் எதிரி மீது இ.த.ச பிரிவு 353 மற்றும் 4(1) (a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**:

10.1). எதிரி சுதாகரன் 01.07.2023-ஆம் தேதி, 06.00 மணிக்கு, அறிவு திருக்கோயில் அருகே, TN 59 CA 5661 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் CT 100 இருசக்கர வாகனத்தில் முன்பகுதியில் பிளாஸ்டிக் சாக்கு பையில் லாப நோக்கில் விற்பனை செய்வதற்காக அரசு அனுமதியின்றி 8 பிராந்தி பாட்டில்களை வைத்திருந்தவரை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்டபோது, சோதனை செய்யவிடாமல் பிரச்சனை செய்து, அரசு பணியை தடுத்த குற்றம் புரிந்ததாக அரசுத்தரப்பில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு குறித்து பரிசீலனை செய்கையில்,

10.2). அ.சா.1 வீரமுத்து தனது முதல் விசாரணையில், "**01.07.2023-ஆம் தேதி, காலை 06.00 மணிக்கு, அறிவு திருக்கோயில் அருகில் வாகன தணிக்கை செய்தபோது, பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட, சுதாகர் TN 59 CA 5661 பஜாஜ் CT 100 வண்டியில் வரும்போது, தணிக்கை செய்ய விடாமல் தடுத்தார்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.3). மேலும், இது குறித்து அ.சா.2 பாலாஜி தனது முதல் விசாரணையில், "**சுதாகர் என்பவர் TN 59 CA 5661 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் CT 100 வாகனத்தில் வரும்போது வாகனத் தணிக்கை செய்ய விடாமல் தடுத்தார்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.4). மேலும், இது குறித்து அ.சா.3 அசோக் தனது முதல் விசாரணையில், "**சுதாகரன் என்பவர் TN 59 CA 5661 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் CT 100 வாகனத்தில் வந்தவரை மறித்து, விசாரணை செய்தபோது, அவர் உட்கார்ந்து இருந்த இருக்கைக்கு முன்பாக, டேங்க் பகுதியில் வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்குப்பையில் வைத்திருந்த பொருட்களை சோதனை செய்தபோது, அவர் காவலராகிய எங்களுக்கு**

**ஒத்துழைப்பு கொடுக்காமல், எங்கள் பணியை முழுமையாக செய்ய விடாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.5). அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், எதிரி தங்களிடம் வாகனத் தணிக்கை செய்ய விடாமல் தடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், அ.சா.3 புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில், எதிரி தங்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில், வாகன தணிக்கை செய்ய விடாமல் எதிரி தடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்களே தவிர, எந்த விதத்தில் எதிரி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பது குறித்து விவரித்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும், அ.சா.3 புலன் விசாரணை அதிகாரி மட்டுமே எதிரி தங்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

10.6). வாக்குவாதத்தில் ஈடுபட்ட எதிரியின் செய்கை இ.த.ச பிரிவு 353-ன் கீழ் குற்றம் என கருத இயலுமா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **K.DHANANJAY Vs. CABINET SECRETARY AND OTHERS in Criminal Appeal No. ….of 2024 [@ Special Leave Petition (Crl.) No. 5905 of 2022 ] Decided on : 21-10-2024 in paragraph no.6-ல்**,

6. It is on the basis of the above complaint that an FIR has been lodged against the appellant. However, the only allegation against the appellant in the said complaint is that he was shouting and threatening the staff. This itself will not amount to any assault என குறிப்பிட்டுள்ளது. எனவே, வாக்குவாதத்தில் ஈடுபட்ட எதிரியின் செய்கையை இ.த.ச பிரிவு 353-ன் கீழ் குற்றம் என கருத இயலாது என்று மேற்படி முன் தீர்ப்பின்படி இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10.7). மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகச் சொல்லும் வழக்கு சொத்து குறித்து பரிசீலனை செய்கையில், அ.சா.1 வீரமுத்து தனது முதல் விசாரணையில்,

**"பிளாஸ்டிக் சாக்குப்பையில் 180 மில்லி கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் - 4, ஓரியன் பிராந்தி பாட்டில் - 1 மற்றும் 3 பிராந்தி பாட்டில்கள் என மொத்தம் 8 பிராந்தி பாட்டில்களை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்"** என சாட்சியம் அளித்துள்ளார்.

10.8). மேலும், இது குறித்து அ.சா.2 பாலாஜி தனது முதல் விசாரணையில், **"பிளாஸ்டிக் சாக்கு பையில் 180 மில்லி அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் - 4, ஓல்ட் செப் பிராந்தி பாட்டில்கள் - 3, ஓரியன் பிராந்தி பாட்டில் - 1 என மொத்தம் 8 பிராந்தி பாட்டில்களை வைத்திருந்தார்"** என சாட்சியம் அளித்துள்ளார்.

10.9). மேலும், இது குறித்து அ.சா.3 அசோக் தனது முதல் விசாரணையில், **"மேற்படி எதிரியிடம் இருந்த பிளாஸ்டிக் சாக்கை சோதனை செய்தபோது, 180 மில்லி பிடிக்கக்கூடிய எக்ஸ்பிரஸ் பிராந்தி மதுபானம் நிறைந்த பாட்டில்கள் நான்கும், ஓல்ட் செப் பிராந்தி மதுபானம் நிறைந்த பாட்டில்கள் மூன்றும், ஓரியன் மதுபானம் நிறைந்த பாட்டில் ஒன்றும், ஆக மொத்தம் எட்டு பாட்டில்கள் வைத்திருந்தார். இது குறித்து அவரிடம் விசாரித்தபோது, டாஸ்மாக் கடைகள் இயங்காத நேரங்களில் பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு லாப நோக்கத்தில் விற்று வந்ததாக ஒப்புக்கொண்டு, அதேபோல் இந்த பாட்டில்களையும் விற்பனைக்கு வாங்கிக் கொண்டு செல்வதாக கூறினார்"** என சாட்சியம் அளித்துள்ளார்.

10.10). மேற்படி மது பாட்டில்களை எதிரி விற்பனை செய்வதற்காக கொண்டு சென்றதாக தங்களிடம் ஒப்புக்கொண்டதாக அ.சா.3 சாட்சியம் அழைத்துள்ளார். ஆனால், அதற்கு ஆதரவாக எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. மேலும், தனி நபர் சாட்சியங்கள் யாரையும் அரசுத்தரப்பு விசாரித்ததாக அரசுத்தரப்பு வழக்கிலும் இல்லை. எனவே, எதிரி மது பாட்டில்களை சுய லாப நோக்கத்திற்காக விற்பனைக்காக வைத்திருந்ததாகச் சொல்லும் அரசுத்தரப்பு குற்றச்சாட்டு உரிய

சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கப்படவில்லை.

10.11). மேலும், எதிரி தரப்பில் தனிநபர் மதுபான பாட்டில்கள் வைத்துக் கொள்ளும் அளவு குறித்து அ.சா.3-ன் குறுக்கு விசாரணையில், "**இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மது வகைகளை ஒரு தனி நபர் சுமார் 4.5 லிட்டர் வரை சொந்த உபயோகத்திற்காக வைத்துக் கொள்ளலாம் என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.12). எனவே, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் மொத்தம் 8 பாட்டில்களின் மொத்த கொள்ளளவு 1.440 லிட்டர் மதுபானம்தான் அவரிடம் இருந்து எடுக்கப்பட்டதாக அரசுத்தரப்பு வழக்கு முன்னிடப்பட்டுள்ளது. எனவே, THE TAMIL NADU LIQUOR (POSSESSION FOR PERSONAL CONSUMPTION) RULES, 1996* (G.O.Ms. No.75, P&E., dated 16th April 1996.) Indian made Foreign Spirits 4.5 liters வைத்துக் கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எதிரி 1.440 லிட்டர் மதுபானம் வைத்திருந்த செய்கை மேற்படி விதியின் கீழ் குற்றம் என கருத இயலாது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, அரசுத்தரப்பு வழக்கை உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை எனக் கருதி, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

## தீர்வு

11). முடிவாக, எதிரி மீது இ.த.ச பிரிவு 353 மற்றும் 4(1) (a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பால் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

12). **<u>கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழான உத்தரவு</u>**:

12.1). இவ்வழக்கின் P.R.No.404/2023-ல் கண்ட படிவம் 91-ல், Item No.1-ல் 180 ML அளவு கொண்ட Express Brandy பாட்டில்கள் - 4 உள்ளது. Item No.2-ல் OLD CHEF Brandy பாட்டில்கள் - 3 உள்ளது. Item No.3-ல் Vorian Brandy பாட்டில் - 1 உள்ளது. மேலும், மேற்படி படிவம் 91-ல் காண்பிக்கப்பட்டுள்ள அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையிலான தடயச் சொத்தான 8 மது பாட்டில்களில் உள்ள திரவத்தை அழித்து, காலி பாட்டில்களை அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

12.2). இவ்வழக்கின் P.R.No.404/2023-ல் கண்ட படிவம் 91-ல், Item No.4-ல் TN 59 CA 5661 பதிவெண் கொண்ட Bajaj CT – 100 இருசக்கர வாகனம் ஒன்று உள்ளது. மேற்படி படிவம் 91-ல் காண்பிக்கப்பட்டுள்ள அ.சா.பொ.4 தடயச் சொத்தைப் பொறுத்து இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, அம்மனுவின் மனுதாரர் மேற்படி தடயச் சொத்தை இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீடு காலத்திற்குப்பின் மேற்படி தடயச் சொத்திற்காக எழுதிக்கொடுக்கப்பட்ட பிணைமுறியை இரத்து செய்ய கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

13). **<u>கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழான உத்தரவு</u>**:

எதிரியிடமிருந்து கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழ் இருநபர் ஜாமீனில் பிணையப் பத்திரம் தாக்கல் செய்ய உத்தரவிட்டும், தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு,

அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஆகஸ்ட் திங்கள் 04-ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NALLA KANNAN M Digitally signed by NALLA KANNAN M Date: 2026.08.04 16:29:16 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

**1. அரசுத்தரப்பு சாட்சிகளின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.வீரமுத்து | முதல்நிலை காவலர் |
| 2. | அ.சா.2 | திரு.பாலாஜி | முதல்நிலை காவலர் |
| 3. | அ.சா.3 | திரு.அசோக் | புலன் விசாரணை அதிகாரி |

**2). அரசுத்தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அத்தாட்சியில் உள்ள 1-வது கையொப்பம். | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | அத்தாட்சியில் உள்ள 2-வது கையொப்பம். | அ.சா.2 |
| 3. | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.3 |
| 4. | அ.சா.ஆ.3 | அத்தாட்சி. | அ.சா.3 |
| 5. | அ.சா.ஆ.3 | படிவம் - 91. | அ.சா.3 |

**3). அரசுத்தரப்பு சான்றுப் பொருள்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.பொ.1 | 180 ml அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை - 4). | அ.சா.3 |
| 2. | அ.சா.பொ.2 | ஓல்ட் செஃப் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை - 3). | அ.சா.3 |
| 3. | அ.சா.பொ.3 | ஓரியன் பிராந்தி பாட்டில் (எண்ணிக்கை - 1). | அ.சா.3 |
| 4. | அ.சா.பொ.4 | TN 59 CA 5661 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் CT 100 இருசக்கர வாகனம். | அ.சா.3 |

**4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்**: தாக்கல் இல்லை.

**<u>5). குறிப்பு</u>:**

1. சாட்சிகள் எவரும் 3 முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

2. விசாரணை காலத்தில் எதிரி பிணையிலிருந்து முன்னிலையானார்.

3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.08.04 16:29:22 +0530

நீதித்துறை நடுவர்,

போடிநாயக்கனூர்.